# கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,
# கொழும்பு – 4.
## முதலாம் தவணைப் பரீட்சை – 2015
## வரலாறு - I

தரம் : 11 நேரம் : 3 மணித்தியாலம்

சுட்டெண் : ........................

## பகுதி I

**எல்லா வினாக்களிற்கும் விடை தருக.**

(1) பண்டுவஸ்நுவர எனும் குடியிருப்பு அமைந்துள்ள நதிக்கரை?
(1) மல்வத்துஓயா (2) கணதரஓயா
(3) கல்ஓயா (4) தெதுறுஓயா

(2) 'வரலாறு என்பது பல அறிவுத்துறைகள் கூடிவாழும் இல்லம்' எனக்கூறிய வரலாற்றாசிரியர்
(1) E.H.ஹார் (2) ஜவகர்லால்நேரு
(3) ஜீ.எம்.திரவிலியன் (4) ஹெரடோரஸ்

(3) இலங்கையின் எழுத்துமூலமான வரலாறு காணப்படும் காலப்பகுதி
(1) 2500 வருடங்களுக்கும் மேல் (2) 2400 வருடங்கள்
(3) 2600 வருடங்கள் (4) 2800 வருடங்கள்

(4) தொலமி எழுதிய ''பூகோள சாஸ்திரப் பிரவேசம்'' எனும் நூலில் இலங்கையை .................. என அழைத்தார்.
(1) செரண்டிப் (2) தப்ரபேன்
(3) இரத்தினதுவீபம் (4) ஈழம்

(5) நாற்பத்துநான்கு ஆண்டுகளாக நியாயமான நீதியான நிர்வாகத்தை மேற்கொண்ட வராகக் கருதப்படும் அநுராதபுரத் திராவிட ஆட்சியாளர் பின்வருவோரில் யார்?
(1) எல்லாளன் (2) திரீதரன்
(3) பூலகத்தன் (4) பணயமாறன்

(6) கலிங்கத்தொட்டியினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான தொழில் யாது?
(1) மேலதிக நீரை வெளியேற்றுதல்.
(2) குளக்கட்டை அலைகளின் தாக்கத்திலிருந்து காத்தல்.
(3) குளத்திலிருந்து நீர் வெளியேறும் போது நீரின் அமுக்கத்தினால் குளக்கட்டு பாதிக்கப்படாமல் பாதுகாத்தல்.
(4) குளத்தில் ஏற்படும் அடையலைக் கட்டுப்படுத்தல்.

(7) நாடுகாண் பயணங்களில் முதலில் கவனம் செலுத்திய ஐரோப்பிய நாடு?

(1) ஸ்பெயின் (2) போர்த்துக்கல்

(3) ஒல்லாந்து (4) பிரான்ஸ்

(8) மகத இராச்சியத்தை ஆட்சிசெய்த காலத்திற்கு ஏற்ப பின்வரும் அரசர்களை ஒழுங்குபடுத்தும் போது சரியான விடை யாது?

A - அஜாசத்தன்

B – மகாபத்மானந்தன்

C – பிம்பிசாரன்

D – சந்திரகுப்தமௌரியன்

E - அசோகன்

(1) CABDE (2) BCAED (3) BADCE (4) CADBE

(9) இலங்கைக்கு வந்த சில வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள் நிரல் 1 இலும் அவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றிய அரசர்கள் நிரல் II லும் உள்ளன. நிரல் 1 ற்கு ஏற்ப நிரல் II ஐப் பொருத்தும் போது சரியான விடை யாது?

| நிரல் 1 | நிரல் II |
|---|---|
| (1) சேனன் - குத்திகன் | A – தாதுசேனன் |
| (2) பண்டு, பாரிந்த குழு | B – II ம் பராக்கிரமபாகு |
| (3) 1ம் இராஜேந்திரன் | C - அசேலன் |
| (4) கலிங்கமாகன் | D – IV ம் மகிந்தன் |
| | E - 1ம் விஜயபாகு |

(1) CAEB (2) ACBD (3) ACDE (4) CEAB

(10) இறுதி இராப்போசனம் என்ற உலகப் பிரசித்திபெற்ற ஓவியத்தை வரைந்தவர் யார்?

(1) ரபியல் (2) டான்ரே

(3) லியனாடோடாவின்சி (4) பொட்டிசெல்லி

(11) "சீனாவின் வெற்றிகரமான புரட்சியாளர்கள் விவசாயிகளே" இது யாருடைய கூற்றாகும்?

(1) சுன்-யாத்-சென் (2) சியாங் கை – ஷெக்

(3) மாவோ சே-துங் (4) சோ என்-லாய்

(12) இலங்கைப் பாராளுமன்றத்தில் இருந்த இருமன்ற முறைமை எந்த அரசியலமைப்பின் மூலம் இரத்துச்செய்யப்பட்டது?

(1) கி.பி.1931 (2) கி.பி. 1947

(3) கி.பி. 1972 (4) கி.பி.1978

(13) நான்காம் புத்த அவையை நடத்துவதற்கு அனுசரணையளித்த அரசன் யார்?

(1) காலசோக (2) அஜாசத்த

(3) கனிஷ்க (4) தர்மாசோக

(14) அனுராதபுர இராச்சியத்தின் இறுதி மன்னனாகக் கருதப்படுபவன் யார்?

(1) V ம் மகிந்தன் (2) VI ம் மகிந்தன்

(3) III ம் மகிந்தன் (4) IV ம் மகிந்தன்

(15) "கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித" என அழைக்கப்பட்ட அரசன்

(1) இரண்டாம் பராக்கிரமபாகு (2) நான்காம் பராக்கிரமபாகு

(3) ஐந்தாம் பராக்கிரமபாகு (4) ஆறாம் பராக்கிரமபாகு

(16) யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் வசமான ஆண்டு எது?

(1) கி.பி.1618 (2) கி.பி.1619

(3) கி.பி.1620 (4) கி.பி.1621

(17) கம்பளை இராசதானியை கி.பி.1341ம் ஆண்டு இராசதானியாக்கிய மன்னன் யார்?

(1) 1ம் புவனேகபாகு (2) 4ம் புவனேகபாகு

(3) 2ம் புவனேகபாகு (4) 3ம் புவனேகபாகு

(18) சப்புமல்குமாரன் கோட்டை இராசதானிக்கு அரசனாகிய பின்னர் வழங்கப்பட்ட பெயர்?

(1) 6ம் புவனேகபாகு (2) 4ம் புவனேகபாகு

(3) ஜயபாகு (4) 7ம் பராக்கிரமபாகு

(19) இலக்கியத்தின் பொற்காலம் என அழைக்கப்பட்ட காலம்?

(1) அநுராதபுரக்காலம் (2) கோட்டைகாலம்

(3) பொலன்னறுவைக்காலம் (4) கம்பளைக்காலம்

(20) இஸ்லாம் சமயத்தின் ஆரம்ப கர்த்தா

(1) முகம்மது நபி (2) கலீபா அபூபக்கர்

(3) கலிபா உமர் (4) செய்யது நபி

(21) இலங்கையின் கரையோரம் பிரித்தானியரின் முடிக்குரிய குடியேற்றமாக்கப்பட்ட ஆண்டு?

(1) கி.பி. 1778 (2) கி.பி. 1802

(3) கி.பி. 1803 (4) கி.பி. 1797

(22) பிரான்சில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு குடியாட்சி ஏற்பட்ட ஆண்டு?

(1) கி.பி. 1789 (2) கி.பி. 1766

(3) கி.பி. 1788 (4) கி.பி. 1787

(23) பிரித்தானியர் மலையகத்தைக் கைப்பற்றிய போது ஆளுநராக இலங்கையில் பதவி வகித்தவர்?

(1) பிரட்ரிக்நோர்த் (2) தோமஸ் மெயிற்லண்ட்

(3) றொபேட் பிரவுண்றிக் (4) மெக்கன்ஸி

(24) சட்டவாக்க கழகத்திற்குத் தெரிவான முதலாவது கல்விகற்ற இலங்கையர்?

(1) C.W.W. கன்னங்கரா (2) சேர்.பொன்.அருணாச்சலம்

(3) J.M.பீரிஸ் (4) சேர்.பொன். இராமநாதன்

(25) டொனமூர்யாப்பு எழுதப்பட்ட ஆண்டு?

(1) கி.பி.1910 (2) கி.பி. 1924

(3) கி.பி. 1931 (4) கி.பி. 1947

(25 x 1 =25 புள்ளிகள்)

## பகுதி II

- பகுதி I ன் 1ம் வினா கட்டாயமானதாகும்.
- பகுதி II லிருந்து ஒரு வினாவையும், பகுதி III லிருந்து ஒரு வினாவையும் கட்டாயம் தெரிவுசெய்து விடை தருக. மேலும் ஒரு வினாவையும் விரும்பிய பகுதியிலிருந்து தெரிவுசெய்து **நான்கு வினாக்களிற்கு** விடை தருக.

பகுதி I

(01) அ. கீழே பிரிவு 1ல் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் புறுஉருவப்படத்திலும், பிரிவு 2 இல் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) ஜம்புக்கோணப்பட்டணம், தீகவாவி, அநுராதபுரம், மகாவலிகங்கை, விஜிதகம, பொம்பரிப்பு (6 புள்ளி)

(ii) கங்கைநதி, விஜயநகரம், கொன்ஸ்தாந்தி நோபிள், நன்னம்பிக்கைமுனை, ஜாவா, உரோம், போர்த்துக்கல் (7 புள்ளி)

ஆ. (i) கீழே A, B, C, D யினால் காட்டப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபட்டவர்களின் பெயர்களை எழுதுக.

A – கி.பி. 1017ல் உருகுணை இராசதானியை ஆக்கிரமித்து ஐந்தாம் மகிந்து மன்னனை சிறைப்பிடித்து இந்தியாவிற்குக் கூட்டிச்சென்றமை.

B – "நாட்டு மக்கள் அனைவரும் எனது பிள்ளைகள் அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பது எனது மேலான கடமையாகும்".

C - பொலன்னறுவையில் காணப்படும் தாமரைத்தடாகத்தை நிர்மாணித்த மன்னன்

D - பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைந்த பின்னர் தம்பதெனியாவை தனது இராச்சியமாகத் தெரிவுசெய்து ஆட்சி செய்த மன்னன். (4 புள்ளி)

(ii) கீழே A, B, C, D யின் கீழ் தரப்பட்டுள்ள நபர்களை ஒழுங்குமுறையில் பெயரிடுக.

| A | B | C | D |
|---|---|---|---|
| | | | |

(4 புள்ளி)

## பகுதி II

(02) (i) பின்வரும் நூல்கள் எழுந்த இராச்சியங்களை A, B, C, என்ற ஒழுங்கில் தருக.

A - தம்பியா அட்டுவா

B - பூஜாவலிய

C - குத்தில காவியம் (3 புள்ளி)

(ii) பின்வரும் ஆரியர் குடியேற்றங்கள் தோற்றம்பெற்ற நதிப்பள்ளத்தாக்குகளை A, B, C, D என்ற ஒழுங்குமுறையில் தருக.

A - உபதிஸ்ஸகம B - உருவெலகம

C - கஜரகம D - தீககம (4 புள்ளி)

(iii) இலங்கையில் ஆரியர்கள் நதிக்கரைகளில் தமது குடியேற்றங்களை அமைத்தமைக்கான இரு காரணங்களைத் தந்து விளக்குக. (5 புள்ளி)

(iv) நீர்வளநாகரிக காலத்தில் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் உயர்வாகக் காணப்பட்டது என்பதற்கு இரு உதாரணங்கள் தந்து விளக்குக. (6 புள்ளி)

(03) (i) பின்வரும் இராச்சியங்களைத் தெரிவுசெய்த ஆட்சியாளர்களைத் தருக.

A - யாப்பகூவ - ………..

B - மினிப்பே - …………..

C - தம்பதெனிய - …………..

(3 புள்ளி)

(ii) 1638ம் ஆண்டு ஒப்பந்தத்தில் காணப்படும் இரு விடயங்களைத் தருக. (4 புள்ளி)

(iii) 3ம் விஜயபாகு மன்னன் சிறந்த மன்னனாகக் கருதப்படுவதற்கான காரணங்கள் இரண்டினைத் தந்து விளக்குக. (5 புள்ளி)

(iv) இராசதானி தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்த பின்னர் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைத் தந்து விளக்குக. (6 புள்ளி)

(04) (i) பின்வரும் ஆண்டுகளில் பிரித்தானியர் இலங்கையில் நடாத்திய ஆட்சி முறைகளைத் தருக.

A - கி.பி. 1796-1798 - ………………..

B - கி.பி. 1798-1802 - ………………..

C - கி.பி. 1802 ன் பின் - ……………….. (3 புள்ளி)

(ii) மலையகத்தை பிரித்தானியர் கைப்பற்ற எண்ணியமைக்கான காரணிகள் இரண்டைத் தருக. (4 புள்ளி)

(iii) பிரித்தானியர் மலையகத்தைக் கைப்பற்றுவதற்குச் சாதகமாக அமைந்த காரணிகள் இரண்டைத்தந்து விளக்குக. (5 புள்ளி)

(iv) 1818ம் ஆண்டுக் கிளர்ச்சிக்கான இரு காரணிகளைத் தந்து விளக்குக.(6 புள்ளி)

## பகுதி III

(05) (i) இந்தியாவில் காணப்பட்ட பதினாறு இராச்சியங்களில் எழுச்சியடைந்து காணப்பட்ட மூன்று இராச்சியங்களதைத் தருக. (3 புள்ளி)

(ii) அசோக மன்னனின் ஆட்சிக்காலத்தின் பின்னர் மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்தமைக்கான இரு காரணங்களைத் தருக. (4 புள்ளி)

(iii) குப்தர் ஆட்சிக்காலத்தில் கல்வி, இலக்கியத்துறைகள் சிறந்து விளங்கின என்பதற்கு ஒவ்வொரு உதாரணங்கள் தந்து விளக்குக. (5 புள்ளி)

(iv) மகா அக்பர் மன்னர் சிறந்த ஆட்சியாளர்களாகக் கருதப்படுவதற்கான காரணங்கள் இரண்டினைத் தந்து விளக்குக. (6 புள்ளி)

(06) (i) பின்வரும் கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்தோரைத் தருக.

A – குருதிச்சுற்றோட்டம் - ……………..

B – தொலைநோக்கி - ………….

C – உலகம் கோளவடிவானது - …………. (3 புள்ளி)

(ii) மானியமுறை சமுதாயத்தின் பண்புகள் இரண்டினைத் தருக. (4 புள்ளி)

(iii) மானியமுறையின் வீழ்ச்சிக்கான காரணிகள் இரண்டினைத் தந்து விளக்குக. (5 புள்ளி)

(iv) இங்கிலாந்தில் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் இரண்டினைத் தந்து விளக்குக. (6 புள்ளி)

(07) (i) பிரான்ஸியப்புரட்சியின் தாரகமந்திரம் மூன்றையும் தருக. (3 புள்ளி)

(ii) பிரான்ஸியப்புரட்சிக்கான இரு காரணங்களைத் தருக. (4 புள்ளி)

(iii) ஆரம்பகாலத்தில் கைத்தொழில்புரட்சி ஏனைய நாடுகளிற்கு பரவாமல் இருந்தமைக்கான காரணங்கள் இரண்டினைத் தந்து விளக்குக. (5 புள்ளி)

(iv) கைத்தொழில்புரட்சியினால் ஏற்பட்ட நன்மை ஒன்றையும் தீமை ஒன்றினையும் தந்து விளக்குக. (6 புள்ளி)